1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) அக்ரிகல்சுரல் ரீபைனன்ஸ் கார்ப்பரேஷன், அதாவது வேளாண்மை மறுநிதிக் கழகத்தினிடம் உதவி பெறும் திட்டங்களும் அக்கழகத்தின் உதவி கோரியுள்ள திட்டங்களும் அடங்கிய விவர அறிக்கை @ ஒன்று இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE : Sir, may I know whether the Government have impressed upon those persons that as far as distribution of the amount is concerned, it would be done equitably all over the State? Also, whether that Corporation have asked this Government that it should be invested in a particular district like Thanjavur district and if so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தால், எல்லா மாவட்டங்களுக்கும் உதவி கோரப்பட்டிருக்கின்றது என்பது தெரியும். எல்லா மாவட்டங்களுக்கும் உதவியளித்துத்தான் வருகிறார்கள்.

DR. H. V. HANDE : My question is, whether the Corpora-have asked the Government to see that the amount should be spent in a particular fashion?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இந்த அக்ரிகல்சுரல் ரீபைனன்ஸ் கார்ப்பரேஷன் நிதி வழங்கும் பொழுது ஒரு பர்டிகுலர் பேஷன் அல்ல, அநேக பேஷன்களிலே நிதி வழங்கப்படுகிறது. அதைப்பற்றிய விவரங்கள் எல்லாம் நாற்பது பக்கங்கள் கொண்டதாக இருக்கிறது.

திரு. எம். பரமசிவம்: தலைவர் அவர்களே, வேளாண்மை மறுநிதிக் கழகத்தின் அடிப்படையிலே இயங்குகின்ற இந்தத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற சில வட்டங்களிலே அமலாக்கப்படாமல் இருக்கின்றன. அப்படியில்லாமல் எல்லா வட்டங்களிலும் அமல் செய்யக்கூடிய வகையில் அதை விரிவு படுத்துகின்ற முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: முயற்சிகள் நடந்து வருகின்றன.

கூட்டுறவுக் கடன்கள்

* 11 வின—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தாண்டு கூட்டுறவுக் கடன்களை தள்ளி வைக்க வேண்டி அரசாங்கம் ரிசர்வு பேங்குக்கு சிபாரிசு செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், ரிசர்வு பேங்கு அதற்கு சம்மதித்துள்ளதா?

@ 82-99-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1971 அக்டோபர் 21

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) & (இ) தள்ளி வைப்பது என்ற சொல் பொது வழக்கத்தில் இருந்தாலும், போஸ்ட் போன்மென்ட் என்பது கூட்டுறவு வங்கிகளின் நடைமுறையில் இல்லை. தேவைப்படும் பகுதிகளிலே ஒரு வருடக் கடன்கள் எல்லாம் மூன்று வருடக் கடன்களாக மாற்றியமைக்கப்படுகின்றன. அதாவது கன்வெர்ஷன் செய்யப்படுகின்றன.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is much ado about giving loans to small and tiny farmers but in practice small farmers find it very difficult to get loans. So, may I know from the Hon. Minister the steps taken to provide easy and quick loans to farmers?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : Sir, small farmers are expected to form themselves into Co-operative Irrigation Societies. Such societies have been formed and small farmers are getting benefit through these societies.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, அப்படி ஒரு வருடக் கடன்களை மூன்று வருடக் கடன்களாகத் தள்ளிவைப்பதாக அரசாங்கம் சொல்லிற்று. ஆனால் 6, 7 வருடங்களாக வறண்ட பகுதிகளாக இருக்கின்றன அவற்றில் எல்லாம் எந்தவிதமான மாற்றமும் ஏற்படுத்தாமல் ஜப்திகள் செய்யப்பட்டு, விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமையில் இருக்கின்றார்கள். இதுகுறித்து மீண்டும் அரசாங்கம் பரிசீலனைசெய்து, ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : நான் கொஞ்சம் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த ஒரு பகுதியிலாவது வறட்சி ஏற்பட்டிருக்குமானால், அதற்காக ரெவின்யூ அதிகாரிகள் சான்றுகள் கொடுத்திருப்பார்களானால், நிச்சயமாக ஒரு வருடக் கடன்களாக இருப்பவற்றை மூன்று வருடங்களுக்குத் தள்ளிவைத்திருப்போம். இந்த ஒரு வருடத்திலே மட்டும் 2 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவிற்குத் தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு பகுதியிலும் வறட்சி உண்மையாகவே ஏற்பட்டிருப்பதற்குச் சான்றுகள் இருந்தும், தவணைகள் தள்ளி வைக்காமல் இருந்தால், உடனே அதைப்பற்றி என்னிடம் தெரிவித்தால், கடன்களைத் தள்ளிவைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகளத்தூர் பகுதி வறண்ட பகுதி என்பதற்குச் சான்றுகள் வந்திருக்கின்றனவா? அங்கே கடன்களைத் தள்ளிவைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த வருடம் வந்திருக்கிறது. ஒரு வருடத்திலே கொடுக்க வேண்டிய கடனிலே 94 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு

1971 அக்டோபர் 21]

வருடத்திலே கொடுக்க வேண்டியதை மூன்று வருடங்களிலே கொடுக்கலாம் என் றுதள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது, இராம நாதபுரம் மாவட்டத்திலே.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, வறட்சி என்று சர்டிபிகேட் கொடுத்தும்கூட ஜப்திகள் வந்திருக்கின்றன. அதற்கு என்னிடத்திலே ஆதாரங்கள் இருக்கின்றன. அமைச்சர் அவர் களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அப்படி இருந்தால், அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றல், அதற்குண்டான ஜி.ஓ. அதாவது அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. வறட்சி என்று சான்று கொடுக்க எம்.எல்.ஏ.-க்களுக்கு அதிகாரம் இல்லை இப்பொழுது. ரெவின்யூ அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த ரெவின்யூ அதிகாரிகள் உண்மையாகவே வறட்சி இருக்குமானல் அறுவாரி சர்டிபிகேட்டுகள் கொடுக்கிறார்கள். அப்படிச் சான்றுகள் கொடுத்த எந்த இடத்திலும் நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை யென்றல், உடனே நாம் அதைப்பற்றிக் கவனிக்கலாம். இதற் காகத்தான் ஏறத்தாழ ஒன்றே முக்கால் கோடி தனியாக ஒதுக்கப் பட்டிருக்கிறது. மாநில வங்கியிலும் தனியாகப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, மத்திய வங்கியிலும் தனியாகப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, கிராம நாணயச் சங்கங்களிலும் பணம் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. எந்த இடத்திற்குத் தேவையோ, அந்த இடத்திற்குச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அரசு பணம் ஒதுக்கியிருந்தும் அப்படி ஏதாவது நடந்திருக்குமானல், அதைப் பற்றித் தெரியப்படுத்துவார்களானல், அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவரவர்களே, இராம நாதபுரம் பகுதியில் கடந்த ஆண்டு வறட்சிப் பகுதி என்று அறிவிக் கப்பட்டிருக்கிறது, எனவே கடன் ஒற்றி வைப்புக்கு ஆணையிட்டிருப் பதாக அமைச்சரவர்கள் கூறினர்கள். ஆனலும், குறிப்பாக அருப்புக்கோட்டை தாலுக்காவில் இன்னும் அதிக கடன்களை அதிகமாக வசூல் செய்ய கெடுபிடியாக ஏற்பாடுகள் செய்துகொண் டிருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, அமைச்சரவர்கள் அதுபற்றிக் கவனித்து அவர்களுக்கு வேண்டிய நிவாரணம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த முறையை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொள்வது நல்லது. தகவல் என்பது நீங்கள் எனக்கு எழுதிக்கொடுத்தால் போதாது, அந்த இடத்திலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது, விளைச்சல் இல்லை என்று ரெவின்யூ அதிகாரிகள் கூறினல், அவர்களிடமிருந்து சான்றிதழ் வாங்கி அனுப்பினல் நிச்சயமாகச் செய்கிறோம். இதுவரையில் அப்படிச் சான்றிதழ் கொடுத்த ஒரு இடத்திலேகூட இல்லை என்று சொன்னது இல்லை. அதற்குத் தாங்கள் முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் நீண்டகாலமாகக் கடன் வசூல் செய்யாமல் உள்ளது. அதிலே வறட்சி 1968-69-ஆம் ஆண்டைத் தவிர, அதற்கு முன்னும் வறட்சி இல்லை, பின்னும் கிடையாது. அதிலும் பெரும் புள்ளிகளை விட்டுவிட்டு, சாதாரண ஏழை எளிய விவசாயிகளிடம் தான் வசூலிக்கப்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வருஷம் செங்கல்பட்டில் வறட்சி இல்லை. வறட்சி உள்ள மாவட்டங்கள், மதுரை, சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், கோயம்புத்தூர், திருநெல்வேலி. ஆனால் இந்த வருஷம் செங்கற்பட்டு மாவட்டத்தில் வறட்சி இருக்கிறது என்று எந்தவிதமான சான்றும் இல்லை, தள்ளி வைக்கவும் இல்லை. இதில் சிறியவர்கள், பெரியவர்கள் என்ற வேற்றுமையில்லை. மத்திய வங்கியின் தலைவர் அங்கே இருக்கிறார்கள். அவர்களிடம் சொன்னால், எந்தவிதமான வேறுபாடும் இல்லாமல் கவனித்துக் கொள்வார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த வறட்சி ஏற்பட்டால் கூட்டுறவுக் கடன்களுக்குக் கன்வர்ஷன் கொடுப்பதாகச் சொன்னார்கள். தவணை செலுத்தும் காலம் கடந்துவிட்டால், அம்மாதிரிக் கடன்களுக்குக் கன்வர்ஷன் கொடுப்பதில்லை. இதற்கு முன்னால் வறட்சி ஏற்பட்டு கன்வர்ஷன் கொடுக்கப்பட்டு, மூன்று ஆண்டுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது, அதையும் கட்ட வேண்டியிருக்கிறது. இதற்காக ஜப்தி போன்றவைகள் நடத்தப்படுவதால், அந்த விவசாயிகள் அதோ கதிக்கு, அதாவது ஜப்தியில் தங்கள் பொருள்களை விட்டுவிடக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே கருணையோடு கொஞ்சம் அதில் நீக்குப் போக்கு ஏற்படுத்த வேண்டுமென்ற முறையில் அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, காலம் கடந்த அந்தக் கடன்களைத் தள்ளி வைக்க வேண்டுமென்று சிலர் கூறியதாகச் சொன்னார்கள். பயிர் விளைகிறது, அப்படி விளைந்ததற்குப் பிறகு, எனக்கு விளையவில்லை என்று நீங்கள் சொன்னால் அரசு அதிகாரிகள் சிலர் நம்பினாலும் நம்புவார்கள்; இல்லையென்றாலும் இல்லை. யாராவது கொடுக்கவில்லை என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கலாம். நண்பர் அவர்கள் கூறினார்கள், கருணை என்று. இந்த அரசு கருணையோடும், நீதியோடும் நடக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அமைச்சரவர்களின் சொந்த மாவட்டமாகிய நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி தாலூக்கா இதுவரையிலும் இல்லாத அளவிற்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா ? அதிகாரிகளின் அறிக்கை இல்லை என்றாலும்கூட,

1971 அக்டோபர் 21]

அமைச்சரவர்கள் தங்களுககுத் தெரிந்தமட்டில் நாங்குநேரி தாலூக்காவில் இந்தக் கடன்களை ஒத்திவைக்க அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, வறட்சி ஏற்பட்டால் கடனைத் தள்ளி வைக்கலாம். ஆனால் கடனைத் தள்ளி வைக்க வேண்டுமென்பதற்காக வறட்சி ஏற்படக்கூடாது.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் முதுகளத்தூர் தாலூக்காவில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சான்றிதழ் கொடுத்தும், கமுதி நில வள வங்கியில் கடன் வேண்டுமென்று கேட்டும் தராததோடு, கடன்கள் வசூலிப்பதை நிறுத்தாததால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எனவே அமைச்சரவர்கள் சம்பந்தப்பட்ட நிலவள வங்கிக்குத் தொகை ஒதுக்கிடு செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி நிலவள வங்கியைப் பற்றியது அல்ல. இது பயிர்க் கடன்களைப் பற்றியது. பயிர் விளையவில்லை என்றால், தள்ளி வைக்கப் பட்டிருக்கிறது. ஒரு வருஷத்துக் கடன். ஆனால் நண்பர் நிலவள வங்கியைப்பற்றிச் சொன்னார்கள். நிலவள வங்கிகளில் தவணை தவறிய கடன்களைத் தள்ளி வைக்கும் முறை இல்லை. அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Co-operation whether revenue officers have been instructed to send the recommendation, viz., 'drought certificates' whenever they get representations from M.L.As. of the locality. For example, in greater part of Dharmapuri district, like Hosur taluk, there were no rains from May to September this year and all financial crops failed. I have made representations to the Collector. I want to know whether the recommendation has come from the Collector of Dharmapuri district to the Government?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The Revenue officials are not concerned with the person making the representation. It may be a M.L.A. or Karnam or a member who has borrowed money from a Co-operation Society. Irrespective of the man, the Reenue officials are bound to say what is the fact. The Collectors have been giving 'Annawari certificate' about the failure of crops, irrespective of the person representing.

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு ஆண்டுக் கடனை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளி வைத்து வசூல் செய்வதாகக் கூறினார்கள். அந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தவணை முறையில் அதாவது 4, 5 முறைகளில் வசூல் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

[1971 அக்டோபர் 21

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது ஒரு ஆண்டுக் கடன். ஓர் ஆண்டில் கொடுக்க முடியவில்லை என்றால், மூன்று ஆண்டு நீடித்துக் கொடுக்கிறோம் அதைத் தவிர. மேலும் நீடிப்பதில்லை.

Tractor workshops in districts

* 12 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Co-operatioh be pleased to state whether there is any proposal to start tractor workshops in all the District centres ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இம்மாதிரி டிராக்டர் ரிப்பேர் ஓர்க் ஷாப்புகள் மாவட்டத்திற்கு ஒன்று இருக்கிறதா? மதுரை மாவட்டத்தில் இருக்கும் ஓர்க்ஷாப்பில் மற்ற மாவட்டங்களுக்கும் ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாவட்டத்திற்கு ஒரு ஓர்க் ஷாப் அமைக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த வினா அப்படிப்பட்ட ஒரு ப்ராப்போசல் இருக்கிறதா என்பதைப் பற்றியது. அந்தப் ப்ராப்போசல் எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்கிறது என்பதுபற்றி, சென்னை, கோவை, திருவாரூர், திருச்சி, வேலூர் ஆகிய ஊர்களில் ஏற்கனவே இப்படிப்பட்ட டிராக்டர் பணிமனைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஒன்று துவங்கப்பட இருக்கிறது. இதைத் தவிர, காஞ்சிபுரம், மதுரை, திருச்சி, விழுப்புரம், சேலம் ஆகிய நகரங்களில் வேளாண்மைத் தொழில் கழகம் டிராக்டர்கள் பழுது பார்க்கும் நிலையங்களைத் தொடங்கியிருக்கின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கனவே ப்ரபபோசலில் இருக்கக் கூடிய இந்த டிராக்டர் ஓர்க்ஷாப்புகளும், பழுது பார்க்கும் மனைகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் துவக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கடலூரில் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திருமதி. த. அ. அனந்தநாயகி : சார், தற்பொழுது எத்தனை டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன, எத்தனை டிராக்டர்கள் இது சீர்திருத்தப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் கேட்கும் அந்தத் தகவல் பற்றி தனி வினா போட்டால், விடை கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது மாவட்டத்திற்கு ஒரு பணிமனை இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். கோவையைப் பொறுத்தவரையில் ஒன்று இருக்கிறது. ஆனால் இப்பொழுது பஞ்சாயத்து ஒன்றியத்திலும் ஒரு டிராக்டர் என்று வாங்கப்பட்டிருக்கிறது.